# Indian Polity Notes Part 13 in Tamil

## 13] நகராட்சிகள்

பகுதி IX-A, 74 – வது அரசியலமைப்பு திருத்தச் (1992) சட்டத்தின்படி இணைக்கப்பட்டது.

- 74 வது திருத்தத்தின்படி
  - ✓ பகுதி "ஒன்பது A" (Part-IX-A) இணைக்கப்பட்டது.
  - ✓ சரத்துக்கள் 243 – P முதல் 243 – ZE வரை 16 சரத்துக்கள் இணைக்கப்பட்டன,
  - ✓ 12 – வது அட்டவணை இணைக்கப்பட்டது.
  - ✓ 12 – வது அட்டவணையில் 18 துறைகள் (Functional items) உள்ளன.

**வரையறை (சரத்து – 243 P)**

- குழு என்பது சரத்து 243-S-ன் படி உருவாக்கப்பட்ட குழு
- மாவட்டம் என்பது மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம்.
- பெருநகர பகுதி என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நகராட்சிகளோ அல்லது பஞ்சாயத்துகளோ மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கி 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகையை கொண்டு ஆளுநரால் அறிவிக்கப்படும் பகுதி.
- நகராட்சி பகுதிகள் என்பது ஆளுநர் அறிவிக்கும் ஒரு பரப்பிடம்.
- மக்கள்தொகை என்பது கடைசியாக எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு.

**நகராட்சியின் அமைப்பு (சரத்து – 243 Q)**

- மூன்று வகையான நகராட்சிகள் உள்ளன.
  1. நகர பஞ்சாயத்து – கிராமத்திலிருந்து நகரமாக மாறக்கூடிய ஒரு பகுதி
  2. நகராட்சி – சிறிய நகர்புற பகுதி
  3. மாநகராட்சி – பெரிய நகர்புற பகுதி
  4. மாறக்கூடிய பகுதி சிறிய நகர் பகுதி பெரிய நகர்புற பகுதி
- மாறக்கூடிய பகுதி சிறிய நகர் பகுதி பெரிய நகர் பகுடி என்று அறிவிப்பவர் ஆளுநர். அவ்வாறு அறிவிக்க ஆளுநர் அப்பகுதியின் மக்கள்தொகை, மக்கள்தொகை அடர்த்தி வருமானம், விவசாயம் அல்லாத துறையின் வேலைவாய்ப்பின் சதவீதம் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் போன்றவற்றை கருத்தில்கொள்ள வேண்டும்.

**நகராட்சிகளின் கட்டமைப்பு (சரத்து – 243 R)**

- நகராட்சியில் உள்ள அனைத்து இடங்களும் நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- நகராட்சி நிர்வாகத்தில் சிறந்தவர்களையும் அந்த நகராட்சி பகுதியில் உள்ள மக்களவை உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர், மாநிலங்களவை தலைவர்களை நகராட்சியின் கட்டமைப்பிற்குள் சேர்ப்பது தொடர்பாக மாநில சட்டமன்றம் முடிவு செய்து கொள்ளலாம்.
- நகராட்சி நிர்வாகத்தில் சிறந்த அறிவுடையவர்கள் நகராட்சி கூட்டங்களில் பங்களிக்கும்போது வாக்களிக்கும் உரிமை கிடையாது.
- நகராட்சி தலைவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை மாநிலச் சட்டமன்றம் தீர்மானிக்கலாம்.

**வார்டு குழு: (சரத்து – 243 S)**

- நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பபட்ட வார்டுகளை இணைத்து மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் வார்டு குழு அமைக்க வேண்டும்.
- வார்டு குழுவின் பகுதி மற்றும் கட்டமைப்பு, வார்டு குழுவின் இடங்களை எவ்வாறு அமைப்பது என்பதை மாநில சட்டமன்றம் தீர்மானிக்கும்.
- அந்த வார்டில் உள்ள நகராட்சி உறுப்பினர் வார்டு குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- வார்டு குழுவில் ஒரு வார்டு இருந்தால் அந்த வார்டின் உறுப்பினர் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்டுகள் இருந்தால் அந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- மாநில சட்ட மன்றம் வார்டு குழு உள்ளிட்ட மற்ற குழுக்களை அமைப்பதற்கும் வகை செய்யலாம்.

**இட ஒதுக்கீடு: (சரத்து – 243 T)**

- ஒவ்வொரு நகராட்சியிலும் உள்ள இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அம்மக்கள் தொகையின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு குறையாமல் இடங்கள் ஒதுக்க வேண்டும்,
- நகராட்சி தலைவர் பதவியில் பட்டியல் இனத்தவர் பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்களுக்கு இடஒதுக்கீடு தொடர்பாக மாநில சட்டமன்றம் வழிவகை செய்யலாம்
- நகராட்சி பகுதியில் உள்ள இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக மாநில சட்டமன்றம் வகை செய்யலாம்

**பதவிக்காலம் (சரத்து – 243 U).**

- நகராட்சிகளின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் (அதன் முதல் கூட்டத்திலிருந்து) நகராட்சியினை கலைக்கும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது. ஆனால் அவ்வாறு கலைப்பதற்கு முன் அந்த நகராட்சிக்கு நியமான வாய்ப்பு வழங்க வேண்டும்.
- நகராட்சித் தேர்தல் அதன் பதவிக்காலம் முடியும் முன்பே நடத்த வேண்டும்.

- கலைக்கப்பட்டால் ஆறு மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்தப்பட வேண்டும், ஆனால் கலைக்கப்பட்ட நகராட்சியின் பதவிக்காலம், ஆறு மாதத்திற்கு உட்பட்டு இருந்தால் புதிதாக தேர்தல் நடத்த வேண்டிய அவசியமில்லை.
- கலைக்கப்பட்ட நகராட்சி மீண்டும் அமைக்கப்பட்டால் மீதமுள்ள காலத்திற்கு மட்டுமே நீடிக்கும்.

**உறுப்பினர்களின் தகுதியின்மை (சரத்து – 243 V)**

- நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டத்தின்கீழ் அல்லது மாநில சட்டமன்றம் இயற்றும் சட்டத்தின்கீழ் கூறப்பட்டிருக்கும் தகுதியின்மை காரணமாக நீக்கம் செய்யலாம்.
- 21 வயது அடைந்து 25 வயதிற்கு கீழ் இருக்கும் ஒருவரை 25 வயதிற்கு குறைவாக இருப்பதைக் காரணமாகக் காட்டி தகுதியின்மை செய்தல் கூடாது.
- மாநில சட்டமன்றம் நிர்ணயிக்கும் ஒரு அதிகார அமைப்பு தகுதியின்மை பற்றி விசாரணை செய்யும்.

**அதிகாரங்கள் மற்றும் பொறுப்பு (சரத்து – 243W)**

- தன்னாட்சிப் பெற்ற உள்ளாட்சி அமைப்பாக செயல்படும் வகையில் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை மாநில சட்டமன்றம் வழங்க வேண்டும்.
- பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை வரைவது, நலத்திட்டங்களை செயல்படுத்தும் வகையில் வகை செய்து தரவேண்டும்.
- தன்னாட்சி அரசுகளாக செயல்படும் அளவிற்கு அதிகாரப் பகிர்வு கொடுக்க வேண்டும்.
- பொருளாதார வளர்ச்சி அல்லது மேம்பாடு மற்றும் சமூக நீதி திட்டங்கள் வரைவு செய்ய, திட்டங்களை செயல்படுத்த அதிகாரமளிக்க வேண்டும்.
- 12 வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள 18 துறைகள் தொடர்பாக அதிகாரமளிக்க வேண்டும்.

**வரி விதிக்கும் அதிகாரம் (சரத்து – 243 X)**

- மாநில சட்டமன்றம் வரிவிதிப்பு, வசூல் மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிக்க அதிகாரமளிக்கலாம்.
- மாநில தொகுப்பு நிதியிலிருந்து மானியங்கள் வழங்கலாம்
- மாநில அரசு விதித்து, வசூலிக்கும் வரிகள், சுங்கம் கட்டணங்கள் போன்றவற்றை நகராட்சிகளுக்கு ஒதுக்கலாம்.
- நகராட்சிகள் சார்பாக பெறப்படும் பணங்களை வரவு வைக்க, வெளியில் எடுக்க நிதியத்தை உருவாக்க வகை செய்யலாம்.

**மாநில நிதிக்குழு (Finance Commission) (சரத்து – 243 Y)**

- சரத்து – 243 – I ன் படி அமைக்க நிதிக் குழு நகராட்சி அமைப்புகளின் நிதிநிலையை மறு ஆய்வு செய்து பரிந்துரைகளை ஆளுநருக்கு அனுப்பும்.

**மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகள்/பணிகள்**

- மாநில அரசு மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கு இடையே நிதி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட வேண்டும் என ஆளுநருக்கு பரிந்துரை செய்கிறது.
- வரி tolls, சுங்கம், கட்டணங்கள் போன்றவைகளை நிர்ணயிக்க நகராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைக்கும்.
- மாநில தொகுப்பு/திரட்டு நிதியிலிருந்து நகராட்சிகளுக்கு மானியங்கள் வழங்குவது பற்று பரிந்துரை செய்கிறது.
- நகராட்சிகளின் நிதிநிலையை அதிகரிக்க வழிமுறைகளை கூறும்.
- நகராட்சி நிதி குறித்த விசயங்கள் தொடர்பாக ஆளுநர் ஏதேனும் பரிந்துரைத்தால் அதுபற்றி ஆலோசித்து பரிந்துரை செய்யும்.
- நிதிக்குழு தனது அறிக்கையினை ஆளுநரிடம் சமர்ப்பிக்கும், அவர் அதனை விளக்கக் குறிப்புகளுடன் சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

**கணக்குகளின் தணிக்கை (Audit) (சரத்து – 243 Z)**

- மாநில சட்டமன்றம் இயற்றும் சட்டத்தின்படி ஒவ்வொரு நகராட்சி அமைப்புகளும் கணக்கு நிர்வகித்தல் மற்றும் தணிக்கை செய்ய வேண்டும்.

**தேர்தல் (சரத்து – 243 ZA)**

- நகராட்சிகளின் தேர்தல் மேற்பார்வை, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, கட்டுப்பாடு போன்றவைகளை நடத்துவது சரத்து – 243 – K ன் படி அமைக்கப்பட்ட மாநில தேர்தல் ஆணையம் ஆகும்.

**யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தக்கூடிய தன்மை (சரத்து – 243 ZB)**

- சரத்து 244 – ல் கூறப்பட்டுள்ள ஐந்தாவது அட்டவணையில் உள்ள பகுதிகள் (அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிஸோரம் தவிர மற்ற மாநிலங்களில் உள்ள பகுதிகள்) மற்றும் 6வது அட்டவணையில் உள்ள அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிஸோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பகுதிகள்.
- மேற்கு வங்காள மாநிலத்தில் டார்ஜிலிங் மாவட்டத்தின் மலைப்பகுதியில் உள்ள டார்ஜிலிங், கோர்கா அவை உள்ள இடங்களில்.

**மாவட்டத் திட்டக்குழு (சரத்து – 243 ZD)**

- ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட அளவில் மாவட்ட திட்டக்குழு இருக்க வேண்டும். இது அந்த மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகள் தயார் செய்த வளர்ச்சித் திட்ட மாதிரியினை ஒருங்கினணக்கும் வேலையினைச் செய்யும்.
- மாவட்ட திட்டக்குழுவின் கட்டமைப்பு அந்த இடங்களை நிரப்புகின்ற முறை போன்றவைகளை மாநிலச் சட்டமன்றம் தீர்மானிக்கலாம்.
- ஐந்தில் நான்கிற்கு குறைவில்லாத உறுப்பினர்கள் மற்றும் நகராட்சியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்ட வேண்டும்.
- இக்குழுவின் தலைவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்று மாநிலச் சட்டமன்றம் முடிவு செய்யலாம்.
- ஒவ்வொரு மாவட்டத் திட்டக் குழுவும் வளர்ச்சித் திட்டங்களை வரையும் பொழுது பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பொதுவான விசயங்கள் நீர் பங்கீடு இயற்கை வளங்கள் ஒருங்கினணக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகள், சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு மற்றும் எந்த வகையான வளங்கள் உள்ளன என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.
- குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை ஆளுநர் ஆலோசனை செய்யலாம்.
- மாவட்டத் திட்டக் குழு தயாரித்து பரிந்துரை செய்த வளர்ச்சித் திட்டத்தினை அக்குழுவின் தலைவர் மாநில அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

**பெருநகரத் (Metropolitian) திட்டக் குழு (சரத்து – 243 ZE)**

- ஒவ்வொரு பெருநகர பகுதிக்கும் வளர்ச்சித் திட்ட வரைவினை தயார் செய்வற்காக பெருநகரத் திட்டக் குழு (Planning Committee) அமைக்கப்பட வேண்டும்.
- பெருநகர திட்டக் குழுவின் கட்டமைப்பு அந்த குழுவின் இடங்களை நிரப்புகின்ற முறை போன்றவைகளை மாநிலச் சட்டமன்றம் தீர்மானிக்கலாம், ஆனால் 2/3 பங்கிற்கு குறைவில்லாத உறுப்பினர்கள் நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பெருநகரப் பகுதியில் உள்ள பஞ்சாயத்து தலைவர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.
- இக்குழுக்களில் மத்திய, மாநில மற்றும் வேறு நிறுவனங்களின் பங்களிப்பு தேவை என்று கருதினால் மாநில அரசு அதற்கான வகைமுறைகளை செய்யலாம்.
- பெருநகரப் பகுதிக்கானத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பானப் பணிகளை அக்குழுவிற்கு பணித்தலும். இக்குழுவின் தலைவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்யம் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது.
- ஒவ்வொரு பெருநகரத் திட்டக் குழுவும் அப்பகுதியில் உள்ள பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கினணக்க வேண்டும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட, வெளிசார்ந்த பகுதித் திட்டம், நீர்ப் பகிர்வு மற்றும் தொடு உணர் மற்றும் இயற்கை வளங்கள், ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

உள்ளிட்ட, நகராட்சி மற்றும் பஞ்சாயத்துகளுக்கிடையேயான பொதுநலன் தொடர்பான விடயங்கள்.

- மத்திய, மாநில அரசுகள் நிர்ணயித்த ஒட்டுமொத்த நோக்கம் மற்றும் முன்னுரிமைகள்.
- மத்திய, மாநில அரசின் முகவர்கள் அல்லது நிறுவனங்களால் பெருநகரப் பகுதிகளில் செய்யப்படும் முதலீட்டின் தன்மை மற்றும் அளவு மற்றும் கிடைக்கும் வளங்கள்.
- ஆளுநர் குறிப்பிடும் நிறுவனங்களை, அமைப்புகளை கலந்தாலோடசித்தல்.
- இக்குழு தயாரித்த திட்ட வரைவினை குழுவின் தலைவர் மாநில அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

**சரத்து – 243 ZF**

- 74 வது சட்டத் திருத்தம் அமலுக்கு வருவதற்கு முன்பு மாநிலங்களின் நகராட்சிகள் தொடர்பான ஏதேனும் சட்டங்கள் இருந்தால் தகுதி வாய்ந்த சட்டமன்றம் ரத்து செய்யும் வரையிலோ (எது முதலில் வருகிறதோ) நடைமுறையில் இருக்கும்.
- இத்திருத்தம் அமலுக்கு வருவதற்கு முன்பு நடைமுறையில் உள்ள அனைத்து நகராட்சி அமைப்புகளும் பதவிக்காலம் முடியும் வரை இருக்கலாம் அல்லது கலைக்கப்படலாம்.

**சரத்து – 243 ZG**

- தொகுதி சீரமைப்புத் தொடர்பான சட்டங்களை நீதிமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாது.
- நகராட்சி தேர்தல் தொடர்பான விடயங்களை நீதிமன்றம் சென்று வினவ முடியாது.
- நகராட்சி தேர்தல் தொடர்பான விடயங்களை நீதிமன்றம் சென்று வினவ முடியாது.

**தமிழ்நாடு முனிசிபல் மாநகராட்சி (திருத்தம்) சட்டம் 2016**

- தமிழ்நாடு முனிசிபல் மாநகராட்சி (திருத்தம்) சட்டம் 2016 தமிழக சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு 29.06.2016 அன்று தமிழக ஆளுநரின் ஒப்புதல் பெற்றது.
- இது சென்னை, மதுரை – 1971, கோவை – 1981 நகர மாநச் சட்டம் 1919 – ல் திருத்தம் செய்யப்பட்டது.
- இந்தத் திருத்தத்தின் படி மேயரின் தேர்தல் முறை மாற்றப்பட்டது. இதன்படி தேர்தல் முடிந்தவுடன் நடைபெறும் முதல் நகராட்சி கூட்டத்தில் தங்களுக்குள் ஒருவரை மேயராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்)

**நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்**

- 1991 – ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் 42% மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர்.
- நகர்புற உள்ளாட்சி அமைப்புக்களை 3வகைப்படுத்தலாம்.

1. மாநகராட்சி

2. நகராட்சி
3. பேரூராட்சி

**மாநகராட்சி**

- மக்கள்தொகை அதிகமாக உள்ள பெரிய நகரங்களில் மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- தற்போது தமிழ்நாட்டில் 15 மாநகராட்சிகள் உள்ளன. அவை: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல், தஞ்சாவூர் நாகர்கோயில், ஓசூர், ஆவடி.
- மாநகராட்சியின் தலைவர் மேயர் என்று அழைக்கப்படுகிறார்.
- மாநகராட்சியின் நிருவாக அலுவலர் ஆணையர் எனப்படுகிறார்.
- மாநகரத்திலும் பல வார்டுகள் உள்ளன. வார்டு உறுப்பினார்களை (கவுன்சிலர்கள்) மக்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், மகளிருக்கு இட ஒதுக்கீடுகள் உண்டு.
- மேயர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.
- சொத்துவரி, தொலைக்காட்சிக் கட்டணம். தொழில்வரி, விளம்பர வரி போன்றவை மாநகராட்சியின் முக்கிய வருவாய்களாகும்.
- மாநராட்சி அவையில் இயற்றப்படும் திட்டங்களை செயல்படுத்த மாநராட்சி அலுவலகம் உள்ளது.

**நகராட்சி**

- ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகையுள்ள பேரூர்கள் நகராட்சிகள் ஆகச் செயல்படுகின்றன.
- இவற்றின் தலைவரும், உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும்.
- நகராட்சி ஆணையர் இதன் நிருவாக அலுவலர் ஆவார்
- தமிழகத்தில் மொத்தம் 102 நகராட்சிகள் உள்ளன.
- நகரங்கள் ஒவ்வொன்றும் வார்டுகளாக பிரிக்கப்பட்டு, வார்டு உறுப்பினர்களை மக்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.
- நகராட்சி மன்றம் இயற்றும் தீர்மானங்களை செயல்படுத்த நகராட்சி அலுவலகம் உள்ளது.
- வீட்டுவரி, கேளிக்கை வரி, தொழில் வரி, குடிநீர் வரி போன்றவைகள் முக்கிய வருவாய்கள் ஆகும்.
- புளுகிராஸ் என்ற அமைப்பு விலங்குளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டுள்ளது.

**பேரூராட்சி**

- பத்தாயிரம் மக்கள் தொகைக்கும் மேலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.
- தமிழகத்தில் மொத்தம் 611 பேரூராட்சிகள் உள்ளன.
- பேரூராட்சியின் தலைவரும், மன்ற உறுப்பினர்களும் நேரடித் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
- இட ஒதுக்கீடு உண்டு.
- பேரூராட்சி நிருவாகத்தைச் செயல் அலுவலர் கவனித்துக் கொள்கின்றார்.

winmeen.com